The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே. 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) நிறைவேற்றப்படவேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அட்டவணை, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1971) நிறைவேற்றப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் :—